ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ வண்ணமாடங்கள் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வண்ணமாடங்கள் ॥

## கண்ணன் திருவவதாரச் சிறப்பு

‡வண்ண மாடங்கள் சூழ்⋆ திருக்கோட்டியூர்⋆
கண்ணன் கேசவன்⋆ நம்பி பிறந்தினில்⋆
எண்ணெய் சுண்ணம்⋆ எதிர் எதிர் தூவிடக்⋆
கண்ணன் முற்றம்⋆ கலந்தளறாயிற்றே (1)

ஓடுவார் விழுவார்⋆ உகந்தாலிப்பார்⋆
நாடுவார் நம்பிரான்⋆ எங்குற்றான் என்பார்⋆
பாடுவார்களும்⋆ பல்பறை கொட்டநின்று⋆
ஆடுவார்களும்⋆ ஆயிற்றாய்ப் பாடியே (2)

பேணிச் சீருடைப்⋆ பிள்ளை பிறந்தினில்⋆
காணத் தாம் புகுவார்⋆ புக்குப் போதுவார்⋆
ஆணொப்பார்⋆ இவன் நேரில்லைகாண்⋆ திரு-
வோணத் தான்⋆ உலகாளும் என்பார்களே (3)

உறியை முற்றத்து⋆ உருட்டி நின்றாடுவார்⋆
நறுநெய் பால் தயிர்⋆ நன்றாகத் தூவுவார்⋆
செறிமென் கூந்தல்⋆ அவிழத் திளைத்து⋆ எங்கும்
அறிவழிந்தனர்⋆ ஆய்ப்பாடி ஆயரே (4)

கொண்ட தாளுறி⋆ கோலக் கொடுமழு⋆
தண்டினர்⋆ பறியோலைச் சயனத்தர்⋆
விண்டமுல்லை⋆ அரும்பன்ன பல்லினர்⋆
அண்டர் மிண்டிப்⋆ புகுந்து நெய் ஆடினார் (5)

கையும் காலும் நிமிர்த்துக்⋆ கடார நீர்⋆
பைய ஆட்டிப்⋆ பசுஞ்சிறு மஞ்சளால்⋆
ஐயநாவழித்⋆ தாளுக்கங்காந்திட⋆
வையம் ஏழும்⋆ கண்டாள் பிள்ளை வாயுளே (6)

வாயுள் வையகம்⋆ கண்ட மட நல்லார்⋆
    ஆயர் புத்திரன்⋆ அல்லன் அருந்தெய்வம்⋆
பாய சீருடைப்⋆ பண்புடைப் பாலகன்⋆
    மாயன் என்று⋆ மகிழ்ந்தனர் மாதரே (7)

பத்து நாளும் கடந்த⋆ இரண்டாநாள்⋆
    எத்திசையும்⋆ சயமரம் கோடித்து⋆
மத்த மாமலை⋆ தாங்கிய மைந்தனை⋆
    உத்தானம் செய்து⋆ உகந்தனர் ஆயரே (8)

கிடக்கில் தொட்டில்⋆ கிழிய உதைத்திடும்⋆
    எடுத்துக் கொள்ளில்⋆ மருங்கை இறுத்திடும்⋆
ஒடுக்கிப் புல்கில்⋆ உதரத்தே பாய்ந்திடும்⋆
    மிடுக்கிலாமையால்⋆ நான் மெலிந்தேன் நங்காய் (9)

‡செந்நெலார் வயல்சூழ்⋆ திருக்கோட்டியூர்⋆
    மன்னு நாரணன்⋆ நம்பி பிறந்தமை⋆
மின்னு நூல்⋆ விட்டுசித்தன் விரித்த⋆ இப்
    பன்னு பாடல் வல்லார்க்கு⋆ இல்லை பாவமே (10)

|| பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ||